D.R. copy

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.மா.சதீஷ் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத்(எம்.2)துறை</u>

அரசாணை (3ப) எண்.09

நாள் 27.07.2021
பிலவ, ஆடி –11
திருவள்ளுவர் ஆண்டு–2052.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(எம்) துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ) துறை, நாள். 23.01.2020.
3. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/ 2018–4, நாள் 04.12.2020.
4. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.41343/ கே2/2019, நாள் 12.04.2021.

******

<u>ஆணை:–</u>

பதிவுத்துறையில், திருப்பூர் பதிவு மாவட்டம், காங்கயம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்தபோது, பணிக்காலத்தினிடையே 05.08.2018 அன்று காலமான திரு.பெ.மாதையன் என்பவரின் மனைவி திருமதி.மா.சாந்தி தமது மகன் திரு.மா.சதீஷ், என்பவருக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 08.06.2019–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு.மா.சதீஷ், என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திரு.மா.சதீஷ், 11.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.மா.சதீஷ், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், பதிவுத்துறைத்தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டத்தில், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.மா.சதீஷ், என்பவருக்கு 11.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.11018/ட்டி1/2021, நாள் 12.07.2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.20674/ஜி1/2021, நாள் 16.07.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மாலாசாமி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை–28.
✓திரு.மா.சதீஷ், இளநிலை உதவியாளர்,
கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் வழியாக)

**நகல்:**
தொழிலாளர் நலன் (ம) திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை–9.
மனித வள மேலாண்மைத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.